முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பெரியாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.01.2019, திங்கட்கிழமை

1. **வருக வருக ஞானத்தலைவா**
**வளர்க வளர்க தரும பலமாய்**
**முருகப்பெருமான் அவதாரமான**
**முழுமை ஞானி ஆறுமுக அரங்கன்**

2. அரங்கன் பிரணவ ஞான சக்தி
ஆற்றலாய் இறங்கி அருள
வரங்களாக ஏற்கும் மக்களே
வையகத்தில் ஞானவான்கள் ஆவர்

3. ஆவரென அரங்கன் பலம் கூறி
அருளுவேன் ஒளி சூட்சும நூலை
புவனமதில் **விளம்பி சிலை திங்கள்**
**புகலுவேன் முப்பான் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 30ம் நாள் 14.01.2019, திங்கட்கிழமை)**

4. **வாரமதில் பெரியாழ்வார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
அறம் வளர்க்கும் அண்ணலே
அகிலம் உன் கருணை வழியில்

5. கருணை வழியில் காக்கப்படவே
கந்தவேலன் சக்தியாக அருளிட
தருமபலம் பெருகும் வண்ணம்
தரணியோர் அரங்க ஞானியின்

6. ஞானியின் தருமபலம் பரவிட
நாடெங்கும் அறச்சாலை துவக்கி
இனிமைபட அருட்கஞ்சி தானமும்
எங்கும் செய்து வருதலுற

7. வருகவே மக்களிடை ஞானஅமுது
வலுகூட்டி சுத்தநெறிக்கு வர
மாறுதலான வழிகாட்டி அருளும்
மக்களெல்லாம் முழுமதி கால பூசையாம்

8. பூசையாம் ஞானிகள் பூசையை
பூவுலகில் எங்கும் செய்துமே
பூஜா பலம் பெருக்கி வருக
புதுமைபட சித்தர்கள் சக்தி பரவி

9. பரவியே மக்களிடை மாற்றம்
பரோபகாரம் பக்குவம் சிந்தை
துறவுநிலை போல தெளிவும்
திடமும் கண்டு நிலை உயரும்

10. உயர்வான சமூகச்சூழல் பெருகி
உலகமே சமத்துவ சமதர்ம
தயவுமிகுந்த தேசமாக மாறும்
தன்னார்வ சேவை எங்கும் பரவி

11. பரவியே அரங்கமகான் சக்திபட
பாருலகே மாற்றம் காணும்
தரும ஆட்சியாக மாறும்
தாமுரைத்த ஒளி சூட்சம நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

வருக வருக ஞானத்தலைவன் முருகப்பெருமானே வளர்க வளர்க அளவிலாது தர்மம் செய்து உலகின் தர்மபலமாய் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட முழுமை ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பிரணவ ஞான சக்தியானது ஆற்றலாய் இறங்கி அருள் செய்து வருகின்றதப்பா. அரங்கனின் ஆற்றலாய் வெளிப்படும் ஓங்கார ஞானசக்தியை வரங்களாக ஏற்கின்ற மக்களெல்லாம் ஞானவான்களாக ஆகிடுவார்கள். அத்தகைய பலம்மிக்க மகா ஞானியே ஆறுமுக அரங்கன். அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 30ம் நாள் 14.01.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பெரியாழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பெரியாழ்வார்.

அறம் வளர்க்கும் அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே உமது கருணை வழியில் இவ்வுலகம் காக்கப்படும். உலகம் காக்கப்பட வேண்டியே அரங்கன் முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அருளி நிற்கின்றார். ஆதலினால் உலகின் தருமபலத்தினை பெருக்கிடும் வண்ணம் உலக மக்கள் எல்லாம் அரங்கமகா தேசிகனாரின் தானதரும பணிகளிலே கலந்து தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும் வர, உலகமெலாம் தருமபலம் பெருகிடும். உலகமெலாம் தருமபலம் பரவிட உலகோர் நாடெங்கிலும் அறச்சாலைகளை துவக்கி அந்த அறச்சாலைகளிலே அருட்கஞ்சி தானம்தனை செய்து வர வேண்டும்.

உலகமெலாம் அருட்கஞ்சிதானமும் அன்னதானமும் பெருகிட மக்களிடையே ஞானிகளை வணங்கி அருளும் ஞானஅமுதான உணவு அவர்களுக்கு வலுக்கூட்டிடும். அவர்கள் அரங்கன் வகுத்த தூயநெறியினை கடைப்பிடித்திடும் வாய்ப்பையும் தந்தருளும்.

உலக மக்களெல்லாம் உலக நலன் கருதி அரங்கன் வகுத்த ஞானபூஜைகளான பௌர்ணமிதோறும் நடக்கும் சித்தர் சிறப்பு ஞானவழிபாடுகளில் கலந்து கொள்வதோடு அரங்கன் வகுத்திட்ட பௌர்ணமி ஞானபூஜைகளை ஞானியர் பூஜைகளை உலகமெலாம் செய்து உலகின் பூஜாபலனை பெருக்கி வர வேண்டும். உலகினில் சித்தர் வழிபாடு பெருக பெருக சித்தர்களின் சக்தி உலகமெலாம் பரவி மக்களிடையே நல்ல மாற்றங்களை உருவாக்கும். மக்களின் மனதினில் பரோபகாரமாகிய தயைசிந்தையை பெருக்கிடும். பக்குவம் மக்கள் அடைந்து சிந்தை தெளிந்து அவர்கள் துறவுநிலை போல தெளிவு பெற்று மனோதிடமும் பெற்று நிலை உயர்ந்து வாழ்வார்கள்.

உலகினில் உயர்வான சமூக சூழல் பெருகி உலகமெலாம் சமதர்மமும் சமநீதியும் சமத்துவமும் உண்டாகி உலகின் நாடுகளெல்லாம் தயவுமிக்க நாடுகளாக மாறிடும். உலகினில் தன்னலம் குறைந்து பொது நலம் பெருகி மக்களிடையே தன்னார்வ சேவை பெருகி உலகமெங்கும் பரவி உலகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அளப்பரிய சக்தியினால் இப்பேருலகே நல்ல மாற்றங்களை காணுமப்பா. உலகின் ஆட்சியே மாறி தருமத்தின் ஆட்சியாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் பெரியாழ்வார்.

–சுபம்–